விலை: 30.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 057 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 02 திங்கட்கிழமை (14.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/- + 500/-


## இந்திய மீனவர்கள் 12 பேர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் எல்லை தாண்டிய நிலையில் மீன் பிடித்துக்கொண்டி 15

## திருக்கேதீஸ்வர நுழைவாயிலில் திடீரென முளைத்த மாதா சொரூபம்



(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வளைவு உடைக்கப்பட்ட வீதியின் முகப்பில் மாதா சொரூபம் திடீரென அமைக்கப்பட்டுள்ளது.

வரலாற்று பெருமைமிகு பாடல் பெற்ற ஈச்சரமான திருக்கேதீஸ்வரத்தில் அதன் தனித்துவத்தை சிதைக்கும் வகையில் சைவர்களின் மனதை மீள மீள புண்படுத்தும் வகையில் திருக்கேதீஸ்வர வளைவு உடைக்கப்பட்ட வீதியின் முகப்பில் மிகப் பெரிய மாதா சொரூபம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ள சமயம், இதனை உயர் மத பீடங்களின் ஆளுகையின் கீழ் இயங்கும் அண்மைய ஆண்டுகளில் பெருமெடுப்பில் பண்டைய ஒப்பந்த நடைமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்ட தேவாலய நிர்வா 15

## ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரில்

# இலங்கைக்கு எதிராக கூட்டமான அறிக்கை

## தயாராகிறது பிரிட்டன்



*(கொழும்பு)* ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு கடுமையான பிரேரணையைக் கொண்டுவருவதற்கு பிரித்தானியா தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

*(15 ஆம் பக்கம் பார்க்க)*

## 125 ரூபாய்க்கு சம்பா அரிசி

### அமைச்சர் பந்துல

(காலி)

எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் ஒரு கிலோகிராம் சம்பா அரிசியை 125 ரூபாய்க்கு நுகர்வோருக்கு பெற்றுக்கொடுப்பதற்கு 15

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் மாசி மாத இராசி பலன்கள்

## கொரோனா 31 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 31 கோவிட் மரணங் 15

## அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு இன்றுமுதல் வழங்கப்படும்

### அமைச்சர் செஹான் அறிவிப்பு

( 05 ஆம் பக்கம் பார்க்க )

## 6 மணிநேர தொடர் மின்வெட்டுக்கு வாய்ப்பு

### மின்சார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் 6 மணிநேர தொடர் மின் துண்டிப்பை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. 15

## ராஜபக்ச அரசின் ஆட்சியை கவிழ்ப்போம்

### சஜித் சூளுரை



(கொழும்பு)

கிடைக்கின்ற முதல் சந்தர்ப்பத்திலேயே இந்த அரசாங்கம் கவிழ்க்கப்படும் என ஐக்கிய 15

## சீனா தொடர்பில் இந்தியா அச்சமடையத் தேவையில்லை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் சீனாவின் நடவடிக்கைகள் குறித்து இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது. குறிப்பாக சீனா வட பகுதி மீனவர்களை நெருங் 15

## நாட்டில் நேற்றும் 1,150 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 1,150 பேர் நேற்று அடை 15

## அடுத்த வருடம் பெப்ரவரிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும்

### இராஜாங்க அமைச்சர் ஜானக தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் பெப்ரவரிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய மற்றும் கொலன்னாவ பிரதேசங்களில் 15

## சுகாதார தொழிற்சங்கங்கள் 8ஆவது நாளாகவும் போராட்டம்

(கொழும்பு)

சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் இன்று எட்டாவது நாளாகவும் தொடர்கிறது.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும், 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## Raveens EMC
Karaveddy

**VACCANCY**

- Teacher for ICT (6-11) Classes *(English Medium)*
- Female for Computer Typing *(Tamil and English)*

(C-3770)

**P.Easwaranathan**
Director

**T.P : 076 416 9845**


## பெயர் மாற்ற அறிவித்தல்

இணுவில் தெற்கு இணுவிலை வசிப்பிட மாகக் கொண்ட **தம்பிமுத்து ரவிராஜன்** ஆகிய நான் எனது பெயரினை இன்று முதல் **தம்பிமுத்து ரவிராஜ்** என பெயர் மாற்றம் செய்கின்றேன். எனவே இன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் **ரவிராஜ்** என்ற பெயரையே பயன்படுத்து வேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
**தம்பிமுத்து ரவிராஜ்**
(10179)


## கால்நடைகள் விற்பனைக்கு

நல்லின ஜேசி நாம்பன் கன்றுகள்
10 மாதம் - 30,000/=, 14 மாதம் - 55,000/=
நல்லின மொட்டைக் கொம்பன் சனல் கிடாய்
11 மாதம் - 45,000/=
நல்லின சனல் யமுனாபாரி கன்னி ஆடு 1 வயது - 40,000/=
சனல் ஆடு குட்டித்தாச்சி நிறைமாதம்
2 ஆம் ஈற்றுடன் 55,000/= உடன் விற்பனைக்கு உண்டு.

(10178)

**076 412 3483**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் - கோண்டாவில்

## பழைய மாணவர் சங்கத்தினை மீளமைப்பதற்கான பொதுக் கூட்டம்

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி இன் பழைய மாணவர் சங்கத்தினை மீளமைப்பதற்கான பொதுக் கூட்டம் 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

14.02.2022 (C-3771) -அதிபர்-

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்



மலர்வு
15-11-1942

உதிர்வு
16-01-2022

அமரர்
## கயிலாயபிள்ளை காசிபதி
**(7ம் வட்டாரம், சிவநகர்)**

**(ஓய்வுபெற்ற பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரும் சித்த ஆயுர்வேத வைத்தியரும்)**

16.02.2022 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.


(C-3772)

7ம் வட்டாரம்,
சிவநகர், புதுக்குடியிருப்பு.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 03 . 1965



இறப்பு
12 . 02 . 2022

## தர்மலிங்கம் திரவியராஜ் (ராசு)

யாழ்.எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி பிராங்போர்டை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் திரவியராஜ் (ராசு) நேற்று முன்தினம் (12.02.2022) சனிக்கிழமை ஜேர்மனியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - திரவியம் (ஆசிரியை) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நடராசா - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ரஞ்சனியின் (ராஜி - ஜேர்மனி) அன்புக் கணவரும் திபீசன் (ஜேர்மனி), தேனுகா (ஜேர்மனி), அபிசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி : +491739480013
(ஜேர்மனி)

(10175)

தகவல்: தீபன் தர்சனா
(பெறாமகள்) ஆறுகால்மடம்
தொ.பே: 076 130 1882

## மரண அறிவித்தல்



## இளையவி சாம்பசிவம்

மானாங்கானை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட இளையவி சாம்பசிவம் அவர்கள் நேற்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் பொன்னுத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சாம்பசிவம் செல்வராணியின் (சரோஜா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கமலா, வேலும்மயிலும் மற்றும் பூரணம், நாகேந்திரம், பவனா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஸ்ரீகாந் மற்றும் ஸ்ரீதர் (இலங்கை), ஸ்ரீகுகன் (அவுஸ்திரேலியா), ஸ்ரீரஞ்சன் (கனடா), ஸ்ரீசங்கர் (அவுஸ்திரேலியா), சிந்துஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும் கஜிதா, விஜயகுமாரி, நிரோஜினி, சாந்தகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆர்த்தி, இனியா, தீபன், ஸ்ரீகாந், ஸ்ரீஜா, கயல், கவின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (14.02.2022) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே: 077 082 5966 (10181) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்பிலான மீளாய்வு அறிக்கை இன்று சமர்ப்பிக்கவுள்ளார் பச்லெட்

(கொழும்பு)

**இலங்கை தொடர்பில் தமது மீளாய்வு அறிக்கையை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கையின் பார்வைக்காக சமர்ப்பிக்கவுள்ளார் இன்று திங்கட்கிழமை சமர்ப்பிக்கவுள்ளார்.**



இதனையடுத்து இலங்கை அரசாங்கம் குறித்த அறிக்கை தொடர்பான தமது கருத்தை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்காக இலங்கை அரசாங்கம், ஏற்கனவே சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது.

அதில், இலங்கையின் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் திருத்தங்களும் உள்ளடங்கியுள்ளன.

எனினும் இந்த மீள் திருத்தங்கள் போதுமானவையல்ல என்று ஏற்கனவே இலங்கையில் குறித்த சட்டத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் முஸ்லிம் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியமும், இந்த மீள்திருத்தங்கள் மேலும் முன்னேற்றங்கள் சேர்க்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி இலங்கை தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எனினும் இந்த முறை வாக்கெடுப்பு எதுவும் இடம்பெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் செப்டம்பரில் இலங்கை மீதான மற்றும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (4)

## புத்தளத்திலும் படகு ஏலம்

(கொழும்பு)

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த போது கைப்பற்றப்பட்ட நான்கு இந்திய படகுகள், புத்தளத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த போது கைப்பற்றப்பட்டு கற்பிட்டி ஆணவாசல் கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 இந்திய மீனவப்படகுகளே இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளின் தலைமையில் படகு ஒன்று தலா 51 ஆயிரம் ரூபாய் வீதம் நான்கு படகுகளும் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன. இந்த படகுகள் ஏல விற்பனைக்கு யாழ்ப்பாணம், குருணாகல், வாரியாப்பொல உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 20 க்கு மேற்பட்ட கொள்வனவாளர்கள் வருகை தந்திருந்தனர். (4)

## சவுதி விபத்தில் 3 இலங்கையர்கள் பலி

(சவுதி)

சவுதி அரேபியாவின், தமாம் நகரத்தில் இடம்பெற்ற எரிவாயு விபத்தில் 3 இலங்கையர்கள் உயிரிழுந்துள்ளனர்.

இவர்களில் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த ஏனைய இரு இலங்கையர்கள் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்களரந்தெனிய தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து, வேலைக்காக சவுதி அரேபியாவிற்கு சென்றிருந்த போது, கடந்த ஜனவரி 27ஆம் திகதி இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. (4)

## வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரம் மீட்சியடைகிறது - ஜனாதிபதி



(கொழும்பு)

ஏறக்குறைய இரண்டு வருடங்களாக வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்து வருவதாக ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களுடனான கலந்துரையாடல் தொடரின் முதல் சுற்றுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, கொவிட் - 19 தொற்றைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் நாட்டில் அபிவிருத்திப் பணிகள் தொடர்வதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி விரும்பிய இலக்குகளை அடைவதற்குத் தேவையான பலத்தை அளித்து தேசிய வேலைத் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு மேலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக கலந்துரையாடலில் கலந்து கொண்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் வேலைத் திட்டம் குறித்து பெரும்பான்மையான மக்கள் சாதகமாக உள்ளனர். குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை அடையும் நோக்கத்துடன் சில பிரிவினர் பரப்பும் குற்றச்சாட்டுகளை வல்லுநர்கள் கடுமையாக நிராகரித்தனர். முழு உலகமும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில் இலங்கை திட்டமிட்டு முன்னேறி வருவதாக அவர்கள் சுட்டிக் காட்டினர். (4)

## எரிபொருள் விலைச்சூத்திரம் அமுல்



(கொழும்பு)

எரிபொருள் விலை சூத்திரம் மீண்டும் அமுல்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். இது தொடர்பான சூத்திரம் ஏற்கனவே வரையப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த அரசாங்கம் கொண்டு வந்த எரிபொருள் விலை சூத்திரத்தை தற்போதைய அரசாங்கம் நீக்கி புதிய சூத்திரத்தை தயாரித்துள்ளது. (4)

## தீர்மானத்தை எடுக்க மக்கள் தயார் தேர்தலை விரைவில் நடத்துங்கள்

### பேராசிரியர் திஸ்ஸ வலியுறுத்து

(கொழும்பு)

அரசியல் ரீதியிலான தீர்மானத்தை முன்னெடுக்க நாட்டு மக்கள் தயாராகவுள்ளதால் தேர்தலை விரைவாக நடத்துவது அவசியமாகும்.என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் மாறுப்பட்ட நிலைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது. அரசியல் ரீதியிலான தீர்மானத்தை முன்னெடுக்க நாட்டு மக்கள் தயாராகவே உள்ளார்கள்.

நெருக்கடியான சூழ்நிலையினை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் அரசியல் ரீதியிலான தீர்மானங்களை முன்னெடுப்பார்கள்.

தற்போதைய சூழ்நிலைமையில் தேர்தல் ஒன்று நடத்தப்படுமாயின் அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவு வழங்குவார்களா என்பது சந்தேகத்திற்குரியது.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்தாமல் மன்றங்களின் பதவி காலத்தை மேலும் ஒருவருட காலத்திற்கு நீடித்துள்ளமைக்கான காரணத்தை அரசாங்கம் இதுவரையில் பகிரங்கப்படுத்தவில்லை.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது என குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசாங்கம் முக்கிய தீர்மானங்களை எடுக்கும் போது கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சிகளின் ஆலோசனைகளை கோருவதில்லை.

கூட்டணியில் காணப்படும் முரண்பாடுகளுக்கு சுமுகமான



தீர்வு காண இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என மேலும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் மாவட்ட சித்த மருத்துவமனை, முல்லைத்தீவு மருத்துவ உத்தியோகத்தருமான Dr. **தர்சினி** அவர்களின் அன்புத் தந்தை



**தம்பிராசா சபாரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 23.09.1956 இறப்பு 12.02.2022

(10184) அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை.


## தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் வவுனியா யுவதிகள் வெற்றி



(நெளுக்கும்) வவுனியாவை சேர்ந்த மூன்று யுவதிகள், இளையோர்/ கனிஷ்ட மற்றும் சிரேஸ்ட வீரர்களுக்கான பளுதூக்கும் போட்டியில் தேசிய மட்ட ரீதியில் வெற்றிபெற்று வவுனியா மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

போத்திவல மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இளையோர்/ கனிஷ்ட மற்றும் சிரேஸ்ட புதிய வர்களுக்கான பளுதூக்கல் போட்டி இடம் பெற்றது.

இப் போட்டியில் 44kg எடை பிரிவில் 85kg எடை தூக்கி பானுஜா சுரேஸ் குமார் 2 ஆம் இடத்தையும், 56kg எடை பிரிவில் 71kg எடை தூக்கி விதுசியா சுரேஸ் குமார் 2 ஆம் இடத்தையும், 76kg எடை பிரிவில் 94kg எடை தூக்கி செரோண்யா பால சுப்ரமணியம் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். பளுதூக்கல் கழகத்தின் பயிற்றுவிப்பாளர், ஞா.ஜீவனுக்கும் வவுனியா மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

(5,6,90,299)


## பழைய மாணவர் சங்கம்
## யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### பொதுக் கூட்டம் - 2022

காலம் - 27.02.2022 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் - மு.ப 9.30 மணி
இடம் - அருணாசலம் மண்டபம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொண்டு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(COVID - 19 சுகாதார ஒழுங்குகளைப் பின்பற்றவும்.)

**தலைவர்**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.**

(C-3773)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10182)

076 825 7716 (ஆகாஸ்)



## நினைவஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் சமூக மருத்துவ உத்தியோகத்தருமான (கிராமிய சித்த மருத்துவமனை (சண்டிலிப்பாய் பிரிவு), பண்டத்தரிப்பு) Dr. **வி.வனிதா** அவர்களின் அன்புத் தாயார்

**மகேந்திரன் வேவி சரோஷா**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10183)

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை.

பிறப்பு 28.03.1961 இறப்பு 24.10.2021



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2512

**மேனகன்**

யாரே ஒருவராக இருந்து
முக்கியமானவராக மாறி
மீண்டும் யாரோ ஒருவராக
போவது தான்



இந்த கால உறவுகள்!

**சாலினி**


திருமண புகைப்படத்தை பார்த்ததும்
மகன் : உன் பக்கத்துல யாருப்பா அது செம கியூட்டா நிக்கிறது?
அப்பா : அது உன் அம்மாடா மகனே...



மகன் : அப்புறம் எதுக்குப்பா அந்த குண்டு பொம்பளையோட வாழ்ந்துட்டு இருக்க?

**யதுசன்**

கோவில் உண்டியலில் போடுவதை தவிர்த்து



ஏழைகளுக்கு உணவளித்துப்பார்
நீ தெய்வமாய் தெரிவாய்

**மதுசா**

யாரிடமும் உங்களை
நிரூபிக்க
முயலாதீர்கள்...
இயல்பாய் இருந்து
விடுங்கள்..!!
பிடித்தவர்கள்
நெருங்கட்டும்..
வேண்டாதவர்கள்
விலகி விடட்டும்..!!

**சிந்துஜன்**

தேவைகள் முடிந்த பின்
தேர் என்றாலும்
தெருவில் தான் நிக்கனும்!



**அபிஷா**

இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற எண்ணம்..
உன்னை ராஜாவாக வைத்திருக்கும்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவைகளை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களே அவதானம்!
# ஆபத்தான வாழைப்பழங்கள் நாட்டில் விற்பனை

(கொழும்பு)

நாடு முழுவதும் இரசாயனங்களைப் பயன்படுத்தி, வாழைக்காய்களை 2 மணித்தியாலங்களில் பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுவதாக உணவு தரநிலை பரிசோதிக்கும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மிகவும் ஆபத்தான இரசாயனங்களைப் பயன்படுத்தி வாழைக்காய்கள் மஞ்சள் நிறத்திற்கு மாற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது பொதுமக்களின் உயிரைப் பறிக்கும் செய்கைகளில் ஒன்று எனவும், நாட்டின் பல இடங்களில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், அது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு புறக்கோட்டை மெனிங் சந்தையில் வாழைக்காய்கள் 2 மணித்தியாலங்களில் பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மெனிங் சந்தையில் மொத்தமாக கொள்வனவு செய்யப்படும் வாழைப்பழங்கள் கொழும்பின் பல இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# இன்று முதல் அதிகரிக்கப்பட்ட சமூர்த்தி கொடுப்பனவு

(கொழும்பு)

28 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு வழங்கல், இன்று முதல் ஆரம்பிக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, தற்போதுவரையில் மூவாயிரத்து 500 ரூபாவைப் பெற்ற சமுர்த்தி பயனாளர் குடும்பம் ஒன்றுக்கு, நான்காயிரத்து 500 ரூபா கொடுப்பனவு கிடைக்கப்பெறும்.

2,500 ரூபா கொடுப்பனவைப் பெற்ற குடும்பத்துக்கு, 3,200 ரூபா கொடுப்பனவும், கிடைக்கும்.

இதற்கமைய, எந்தவொரு சமுர்த்தி பயனாளியும், சமுர்த்தி வங்கி மூலம், இன்று முதல் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 22 . 05 . 2004

இறப்பு 01 . 01 . 2022



அமரர். யோகராசா யோகீசன்

ஏம் அன்புச் செல்வமே நீ ஆலமர விருட்சமாய்
விரிந்து நிற்பாய் என ஆசை கொண்டோமடா
ஏனோ ஆண்டவன் உன்னை தன்னுடன் அழைத்து விட்டானே!
எம் உயிரில் கலந்த செல்வமே
உன்னை என்றும் மறவோமடா

(10144)

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# கொழும்பு மேயர் யாழ்.விஜயம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர முதல்வர் ரோஸி சேனநாயக்க மற்றும் அவரது குழுவினர் எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இதன்போது மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் நட்பு ரீதியிலான கிரிக்கெட் போட்டியும் இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகர சபை மற்றும் வலி.தென்மேற்கு பிரதேச சபை ஆகிய இடங்களுக்கு வருகை தரும் முதல்வருடன், கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளடங்கிய 70 பேர் கொண்ட குழு கலந்து கொள்ள உள்ளதாகக் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

# கண்ணீர் காணிக்கை

தேசிய லொத்தர் சபையின் யாழ்.மவட்ட பிராந்திய முகாமையாளர்
வ.துவாரகன் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர். குழந்தைவேலு வயித்திலிங்கம்

மண்ணில்: 1947.02.22
விண்ணில்: 2022.02.12



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
விற்பனை முகவர்கள், யாழ்ப்பாணம்.

(10176)

# இராசிபலன்

14.02.2022
மாசி 02, திங்கட்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.13 மணிவரை

புனர் பூசம் பிற்பகல் 12.40 மணிவரை
சுபநேரம் - 12.33- 2.03 மணிவரை
இராகுகாலம் -8.03-9.33 மணிவரை

சந்திராஷ்டமம்- மூலம்,
பிரதோச விரதம், அமிர்தசித்தம்
உலக காதலர் தினம்

வள்ளவன்

**மேஷம்** கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கடகம்** எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**மகரம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், நினைத்த காரியம் நிறைவேறும் நாள், பொருளாதார நிலையில் வளர்ச்சி காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாடு குதூகலம் தரும், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்** மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**கும்பம்** கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**மிதுனம்** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்ளுவீர்கள் நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கன்னி** விருங்கால நலன் கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

நன்றாக நடத்தினாலும் தீயோர் தீமையே செய்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளமுடியாத பொருளாதார நெருக்கடிக்குள் நாடு கடனை திருப்ப செலுத்துவோர்களுடன் கலந்துரையாடுங்கள்

## அரசிற்கு சுமந்திரன் அறிவுரை

(நெளுக்குளம்)

நாட்டின் கடனை திரும்பச்செலுத்த வேண்டியவர்களோடு உடனடியாக ஒரு பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க வேண்டும். அப்படி செய்தாலே அந்நிய செலாவணி கிடைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கட்சித்தலைவர்கள் சிலரை அழைத்து கடந்த 27 ஆம் திகதி மூடிய அறைக்குள் கலந்துரையாடலை நடத்தியிருந்தோம்.

இது தொடர்பாக எங்களுக்கு தெளிவூட்டுவதற்காக சில பொருளாதார நிபுணர்களையும் அழைத்து அவர்களுடன் கலந்துரையாடிய போது சரித்திரத்திலே என்றுமே இல்லாத அளவுக்கு எமது பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்திருப்பதை உணர முடிந்தது.

எனவே இதிலிருந்து மீள்வதற்காக நாம் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தோம். அத்துடன் அரசாங்க தரப்பில் நாம் கோர வேண்டிய மூன்று விடயங்கள் குறித்தும் ஒருமித்திருந்தோம்.

அது தொடர்பாக 12 பேர் எழுத்து மூலம் கைச்சாத்திட்டு அதனை வெளிப்படுத்தியிருக்கிறோம். அதில் முதலாவதாக கடன் திரும்பச்செலுத்த வேண்டியவர்களோடு உடனடியாக ஒரு பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க வேண்டும். அப்படியாக ஆரம்பித்து கடன் செலுத்துகின்ற திகதிகளை பிற்போட்டு செலுத்தும் தொகை தொடர்பாகவும் அவர்களுடன் பேச்சுவார்த்தையினை நடத்தினால் தான் அந்நியசெலாவணி உடனடியாக கையிலே கிடைக்கும்.

கிடைக்கும் அந்த அந்நிய செலாவணியை அத்தியாவசியமாக உணவு மருந்து எரிபொருள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக நாங்கள் விநியோகிக்க வேண்டும்.

இந்தப்பேச்சு வார்த்தைகளின் போது நிபந்தனைகள் சிலவற்றிக்கு நாம் இணங்க வேண்டிவரும். அந்த நிபந்தனைகள் எதுவுமே எமது நாட்டில் இருக்கின்ற ஏழைமக்களை தாக்காதவாறு நாம் பார்த்து கொள்ள வேண்டும்.

அவர்களது பாதுகாப்புக்காக நாட்டிலே இருக்கும் அரணைகளை நாம் தகர்க்க விடக்கூடாது. அது குறித்து நாம் கவனமெடுத்து இந்த பேச்சுவார்த்தையிலே ஈடுபட வேண்டும். ஆகிய முன்மொழிவுகளை நாம் வெளிப்படுத்தியிருந்தோம்.

அரசாங்கம் துரிதமாக செயற்பட வேண்டியது அத்தியாவசியம். காலம் செல்ல செல்ல இது தொடர்பாக இன்னும் கூடுதலான பிரச்சனைக்குள்ளே நாடுசெல்ல வேண்டிவரும். எனவே உடனடியாக இந்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால்தான் நாம் இந்த கடன் திரும்ப செலுத்தும் விடயத்தில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரக்கூடியதாக இருக்கும் என தெரிவித்தார். (5-6-299)

# வடக்கில் பால் உற்பத்தியை அதிகரிக்க விசேட வேலைத்திட்டம்-ஆளுநர்

(அராலி)

வடக்கு மாகாணத்தில் பால் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஒரு கால்நடை அலுவலகத்திற்கு சுமார் 3.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் பால் உற்பத்தியில் வடக்கு மாகாணம் காத்திரமான இடத்தை வகிக்கின்ற நிலையில் அதனை மேலும் விருத்தி செய்யும் நோக்குடன் மத்திய அரசினால் சுமார் 90 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைகளை உள்ளடக்கி குறித்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.


வடக்கில் சதொச விற்பனை நிலையத்தின் செயற்பாடுகளை அதிகரிப்பதற்காக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகிறது.

ஆகவே மாகாணம் முழுவதும் அத்தியாவசியப் பொருட்களை சதொச விலையில் பெறக்கூடிய வகையில் விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (5-6-18-104)

# ஸ்ரான்லி வீதியில் கஞ்சாவுடன் கைது

(அராலி)

யாழ். பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஸ்ரான்லி வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் 22 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட நபர் மதுவரி திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நிதிமன்றில் முற்படுத்துவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (5-6-104)

## பதவி உயர்வு பரீட்சைக்கு

# விண்ணப்பிக்க முடியாத நிலையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

(சாவகச்சேரி)

உரிய காலப்பகுதியில் பதவி உயர்வு வழங்கப்படாமையால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தரம் மூன்றினைச் சேர்ந்தவர்கள் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலை காணப்படுவதாக வடக்கு மாகாண அரசாங்க சேவை பட்டதாரி உத்தியோகத்தர் சங்க செயலாளர் க.கஜிதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வடமாகாண அரச சேவை பட்டதாரி உத்தியோகத்தர் சங்கத்தினர் வடமாகாண நிர்வாக பிரதிப் பிரதம செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் 2011.11.14 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்- 3 இல் நியமிக்கப்பட்ட வர்கள் 10வருட காலப்பகுதியில் சகல வேதன ஏற்றங்களையும் பெற்று தரம் 2 பதவி உயர்வு பெறுவதற்கான தகுதியைப் பெற்றிருந்தும் இது வரை தரம்-II இற்கு பதவி உயர்வு வழங்கப்படாமையால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்ட இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு அவர்கள் விண்ணப்பிக்க முடியாதுள்ளனர். அதேநேரம் அவர்களுக்கான பரீட்சை சந்தர்ப்பம் வீணடிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

எனவே அவர்களது பதவி உயர்வுகளை விரைவாக வழங்குவதற்கும் -அதுவரை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படவுள்ள இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிப்பதற்கும் ஆவண செய்ய வேண்டும் என வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(5-6-30)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் கடவைதரை ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சபாசந்தனக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பாக இடம் பெறும். (5-6)

# திருடப்பட்ட மோ.சைக்கிள் மீட்கப்பட்டது

(கரணவாய்)

வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இனந்தெரியாத நபர்களினால் திருடிச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தம்பசிட்டி கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு முன்பாக இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மேலைப் புலோலி தம்பசிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் முன்பாக கடந்த வியாழக்கிழமை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேற்படி மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தம்பசிட்டி கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக மேற்படி மோட்டார் சைக்கிள் அனாதரவாக காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டுச்சென்றுள்ளனர். (5-6-60)




| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 700 | 600 |
| தக்காளி | 180 | 150 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 180 | 200 | 200 |
| கரட் | 550 | 550 | 600 |
| பூசணி | 160 | 150 | 200 |
| புடோல் | 200 | 200 | 240 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 480 |
| பெரிய வெங்காயம் | 120 | 120-160 | 160 |
| பாகற்காய் | 300 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 260 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 120 |
| பயற்றங்காய் | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 280 | 320 | 300 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 200 | - | 200 |
| கீரை - 1 பிடி | 90 | 80 | 100 |
| தேசிக்காய் | 150 | 160 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 30-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 100 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | - | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் கனமழை
## வெள்ளத்தில் மூழ்கியது தாழ்நிலப்பகுதிகள்




(திருமலை)

திருகோணமலை நகரை அண்டிய பெரும்பாலான தாழ் நிலப் பிரதேசங்கள் வெள்ள த்தில் மூழ்கியுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக திரு கோணமலை மாவட்டத்தில் கடந்த இரு தினங்களுக்கும் மேலாக தொடர் அடைமழை பதிவாகி வந்தது.

இதனையடுத்தே இவ்வாறு வெள்ள நிலைமை ஏற்பட்டு ள்ளது. அதன்படி திருகோண மலை நகரை அண்டிய துள சிபுரம், அலஸ் தோட்டம், முகம் மதியா நகர் மற்றும் சிறிமாபுர போன்ற பிரதேசங்களில் அரை அடிக்கு மேல் மழைநீர் தேங் கியுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இவ்வாறு மழை நீர் தேங்கி உள்ள பிரதேசங்களில் மக்கள் தமது வீடுகளிலேயே பாதுகாப் பாக இருப்பதாகவும், குறித்த பிரதேசங்களில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (4)

# மரவள்ளி கிழங்குகளுக்கு வெளிநாடுகளில் மவுசு




(கொழும்பு)

இலங்கையில் பயிரிடப்பட்ட மரவள்ளி கிழங்கு வெளிநா டுகளுக்கு ஏற்றுமதி செய்ய ப்படுவதாக தகவல் வெளியா கியுள்ளது.

இலங்கை, கேரளா, தமிழ் நாடு, கர்நாடகா போன்ற இட ங்க ளில் மரவள்ளிக்கிழங்கு பெருமளவில் காணப்படுகின் றது.

இந்நிலையில் இலங்கை யில் இருந்து மரவள்ளி கிழ ங்குகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# 30 அடி பள்ளத்தில் பாய்ந்தது பாரவூர்தி
## ஒருவர் பலி

(கொழும்பு)

கண்டி-வத்துகாமம் பகுதி யில் நேற்று முன்தினம் இட ம்பெற்ற வாகன விபத்தில் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

வத்துகாமம்-எல்கடுவ வீதி யில் பாரவூர்தி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று சுமார் 30 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்து க்குள்ளாகியது.

இதன்போது அதில் பயணி த்த ஒருவர் காயமடைந்த நிலையில் வத்துகாமம் மருத் துமனையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

அதே நேரம் பாரவூர்தியின் சாரதி தப்பிச் சென்றுள்ளதாக வும் சம்பவம் தொடர்பில் வத்து காமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# 10 வெளிநாட்டு மொழிகளை கற்பிக்க விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களு க்கு 10 வெளிநாட்டு மொழி களை கற்பிப்பதற்கானவேலை த்திட்டத்தை நடைமுறைப்ப டுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அபி விருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற் றும் கல்விச் சேவைகள் இரா ஜாங்க அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஆங்கிலம் அரபு மற்றும் ஹிந்தி உள்ளிட்ட மொழிகளுடன் பிரா ன்ஸ், ஸ்பெயின், ஜேர்மன், இத்தாலி, சீன மற்றும் ஜப்பான் முதலான நாடுகளின் மொழிக ளைக் கற்கும் வாய்ப்பு மாண வர்களுக்கு ஏற்படுவதாக இரா ஜாங்க அமைச்சு குறிப்பிடப்பட் டுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இணையவழி முறைமையில் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சர்வதேச கல்வி நிறுவன ங்களுடன் இணைந்து, கூட் டாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டம் தொடர்பில் நாடுமுழுவதுமுள்ள பாடசாலை களின் அதிபர்களை தெளிவு படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு ள்ளது. (4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 26 ¼ சூரி 5செவ் 10 இல்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்: எலக்ரோனிக் Engineer<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர் சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/1798 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 3<br>கி.பா:25 சூரி 9 செவ் 11 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை:தொழில்:BAபதிவாளர் (நீதிமன்றம்)<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ:G/5382 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 15 சூரி 4 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: உயர்தரம் பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12285 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: சூரி 7 செவ் 6 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/ அவுஸ்ரேலியா PR<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ:G/8423 |
| பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா : 54 சூரி 8செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: தச்சுத்தொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12287 | பிறப்பு:1989இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 29 ¾ சூரி, செவ் 8 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: B.B.A<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ:G/8471 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: சூரி 11 செவ் 1 இல் உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்;சொந்தப்பலசரக்குக் கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரணபடித்தபெண்<br>தொ.இ: B/12289 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 13 ¾ சூரி 12 செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc IT/ QEA<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/8503 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## யானை தாக்கி ஒருவர் பலி

(கொழும்பு)

பொலன்னறு வை- அரலங்க வில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்லேவெள பிர தேசத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழ ந்துள்ளார்.

எல்லேவெள பிரதேசத்தைச் சேர்ந்த 60 வய துடைய நபரொ ருவரே இவ் வாறு உயிரிழ ந் து ள் ள தாக பொலிஸ் ஊடக ப்பிரிவு தெரிவி த்துள்ளது.

தாக்குதலுக் குள்ளான குறி த்த நபர் பொல ன்னறுவை மரு த்துவமனையில் அனுமதிக்கப்ப ட்ட போதிலும் சிகிச்சை பலனி ன்றி உயிரிழந்து ள்ளார்.

அரலங்கவில பொலிஸார் இச் சம்பவம் குறித்த மேலதிக விசார ணைகளை மேற் கொண்டு வரு கின்றனர். (4)


# சேவை நலன் பாராட்டு




திருமதி
குணபாலதேவி (SLTS)
சுகுமார்

எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியையாகச் சேவையாற்றி 14.02.2022 அன்று தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி குணபாலதேவி சுகுமார் அவர்களது ஓய்வுகாலம் குடும்பத்துடன் என்றும் சிறக்க மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

(C-3768)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்.
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்.



# சேவை நலன் பாராட்டுக்கள்




செல்வி
கிருஸ்ணவேணி (SLTS-1)
நாகலிங்கம்
(077 264 3625)

ஆசிரியப் பணியில் முடிசூடி இன்றுடன் முப்பத்து மூன்று (2022-02-14) வருடங்கள் நிறைவு. எமது கல்லூரியில் எட்டு வருடங்கள் (2014.01.20- 2022.02.14) மனைப் பொருளியல் பாடத்தை கசடறக் கற்பித்து அளப்பரிய சேவை செய்து இன்றுடன் பணி ஓய்வு பெறும் உங்கள் சேவையினை மனதாரப் பாராட்டி நலம் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா/இணுவில் மத்திய கல்லூரி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# போர்க்களமாக மாறிய பாரிஸ்!

## பொலிஸார் குவிப்பு; பலர் கைது

(பாரிஸ்)

**பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கொரோனா விதிகள் மற்றும் எரிபொருள் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் கலவரமாக மாறியது.**

சுமார் 7000 பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தும், பாரிஸ் நகரம் போர்க்களமாக காட்சியளித்தது.

சம்பவப்பகுதியில் இருந்து பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் போக்குவரத்தைத் தடுக்க தங்கள் வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் இந்த ஆர்ப்பாட்டம் முறியடிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். பாரிஸ் நகரில் நுழைய முயன்ற சுமார் 5 வாகன பேரணியை பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன், 200 கும் மேற்பட்ட சாரதிகளுக்கு அபராதம் விதித்துள்ளனர்.

இரவு 8 மணி கடந்தும் கூட்டம் கலையாத நிலையில் பொலிசார் கண்ணீர்ப்புகை வீசியுள்ளனர்.

அதையடுத்து, இரு தரப்புக்கும் இடையே மோதல் வெடித்தது. பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டு தாக்குதலும் நடத்தப்பட்டது.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட 54 பேரை பாரிஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர். (4)

## அருகி வரும் கோலா கரடிகள்



(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் கிழக்கு கரையோர பகுதியில் காணப்படும் கோலா கரடி இனம் அருகிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

குவீன்ஸ்லாந்து, நியூ சவுத் வேல்ஸ் மற்றும் அவுஸ்ரேலிய தலைநகர் பிரதேசங்களில் அதிக எண்ணிக்கையில் இந்த கோலா கரடி இருந்தன.

காட்டுதீ, வரட்சி, நோய், காலநிலை மாற்றம் மற்றும் காட்டு பிரதேசங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக பாரிய அளவில் அருகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலை தொடருமானால் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் இந்த இனம் முற்றாக அழிந்து விடும் என அவுஸ்ரேலிய சுற்றுச் சூழல் அமைச்சர் எச்சரித்துள்ளார்.(4)

# உயிர்வாழ உகந்த கோள் கண்டுபிடிப்பு



(லண்டன்)

உயிர்கள் வாழக் கூடிய வேறு கிரகங்கள், கோள்கள் இருக்கின்றனவா என்று விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந் நிலையில் உயிர்கள் வாழ தகுதியான ஒரு கோள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

லண்டன் பல்கலைக் கழக கல்லூரியின் பேராசிரியர் ஜேபரிகி தலைமையிலான ஆய்வு குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அதில் கூறி இருப்பதாவது,

"ஒயிட்" டார்ப் என்று அழைக்கப்படும் நட்சத்திரத்தை உயிர்கள் வாழும் சூழ்நிலை கொண்டுள்ள கோள் சுற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூமியில் இருந்து 117 ஒளி ஆண்டு தொலைவில் இருக்கும் இந்த கோளுக்கும் அதன் நட்சத்திரத்துக்கும் இருக்கும் தூரம், பூமிக்கும் சூரியனுக்கும் இடையே இருக்கும் தொலைவை விட 60 மடங்கு குறைவாகும்.

உயிர்கள் வாழக்கூடிய மண்டலம் என்பது ஒரு நட்சத்திரத்தில் இருந்து குறிப்பிட்ட தொலைவில் அமைந்துள்ள பகுதியாகும். இந்த பகுதியில் அமைந்துள்ள கோள்கள் திரவ நீர் இருக்க வாய்ப்புள்ள சூழ்நிலையை கொண்டிருக்கும். எனவே உயிர்கள் வாழ இது உதவும்.

நட்சத்திரத்துக்கு மிகவும் அருகில் ஒரு கோள் இருந்தால் அது மிகவும் சூடாக இருக்கும். அதிக தொலைவில் இருந்தால் மிக குளிராக இருக்கும். தற்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ள கோள் இருக்கும் மண்டலம் உயிர்கள் வாழ மிகச்சரியாக இருக்கும் பகுதியில் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் "இந்த கணிப்பு வானியலாளர்களுக்கு முற்றிலும் புதியது" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# 30 வருடங்களின் பின் வெளிவந்த பேய் கிராமம்



(மட்ரிட்)

ஸ்பெயினில் தண்ணீரில் மூழ்கிய கிராமம் 30 ஆண்டுக்கு பிறகு மீண்டும் வெளியே தெரிய தொடங் கியுள்ள புகைப்படம் இணை யத்தில் வைரலாகி வருகின்றது.

கடந்த 1992 ஆம் ஆண்டு கட்டப்பட்ட Alto Lindoso அணையால் ஸ்பெயின் மற்றும் போர்ச்சு கலுக்கு இடையே உள்ள கிராமங்கள் அனைத்தும் நீரில் மூழ்கியது. தற்போது அந்த அணையில் நீர் வற்ற தொடங்கியதால் கிராமத்தின் சிதிலமடைந்த குடியிருப்புகள் வெளியே தெரிய தொடங்கியுள்ளது.

இந்நிலையில் மக்கள் வசித்த வீடுகளின் கட்ட டங்கள் உருக்குலைந்து எலும்புக் கூடு போல் காட்சி அளிப்பதால் பொது மக்கள் கிராமத்திற்கு பேய் கிராமம் என பெயரிட்டு அழைத்து வருகின்றனர். இதையடுத்து பேய் கிராமத்தின் ட்ரோன் காட்சிகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இவை சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. (4)

# குடும்பத்தினரை சுட்டுக்கொன்ற 15 வயது சிறுவன்

## ஸ்பெயினில் கொடூரம்

(மட்ரிட்)

ஸ்பெயின் நாட்டில் 15 வயது சிறுவன் ஒருவன் தனது குடும்பத்தை சுட்டுக் கொன்ற கொடூர சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த சிறுவன் தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்றது தொடர்பாக அவனது தாய் சத்தம் போட்டபோது இருவருக்கும் தகராறு ஏற்பட்டது.

இதையடுத்து வீட்டில் இருந்த வேட்டையாடும் துப்பாக்கியால் முதலில் தாயையும், பின்னர் தனது 10 வயது சகோதரனையும், தொடர்ந்து தனது தந்தையையும் அந்த சிறுவன் சுட்டுக் கொன்றுள்ளான்.

தொடர்ந்து 3 நாட்கள் சடலங்களுடன் வீட்டில் அந்த சிறுவன் தனியாக இருந்துள்ளான். இந்த சம்பவம் குறித்து வெளியே யாருக்கும் தெரியவில்லை.

3 நாட்களுக்கு பிறகு அந்த வீட்டிற்கு சென்ற உறவுக்கார பெண்ணிடம் அந்த சிறுவன் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளான். அவர் கொடுத்த புகாரின் பேரில் பொலிஸார் சடலங்களை கைப்பற்றியதுடன் சிறுவனை கைது செய்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுத் தலைமையின் பலத்தினூடாகவே தமிழினத்தின் உரிமைகளைப் பெற முடியும்

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

**இந்தியா பிரதமருக்கு கடிதம் அனுப்பும் விடயத்தில் ஒருங்கிணைந்துள்ள கட்சிகளும், தலைவர்களும் ஏனைய விடயங்களை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால் கூட்டுத்தலைமை உள்ளிட்ட கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போது தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தனபோது அதன் பின்னர் 13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு வட,கிழக்கு இணைந்த மாகாண சபை அமைந்தது.

13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் மாகாண சபை உருவாக்கப்பட்டு நாங்கள் வெறும் 15 மாதங்கள் தான் இந்த மாகாண சபையை நிர்வகித்து இருக்கின்றோம். நாங்கள் அப்பொழுதே மிகத் தெளிவாக ஒற்றை ஆட்சிக்குள் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்குரிய தீர்வு அல்ல என்று கூறினோம்.

அடிப்படையில் எதுவுமே இல்லாத நிலையில் தான் நாங்கள் வட,கிழக்கு மாகாண சபையை கையில் எடுத்தோம்.

நாங்கள் அன்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்கின்ற விடயமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதேநேரத்தில் தற்பொழுது தமிழ்பேசும் கட்சிகள் சேர்ந்து 13ஐ வலியுறுத்தி அதை நடைமுறைப் படுத்த முயற்சிப்போம் என்ற முயற்சி எடுக்கப்பட்டது. இது 13 இற்குள் எங்கள் மக்களின் அபிலாஷைகளை சுயநிர்ணயத்தை அதிகாரப் பகிர்வு விடயங்களை முடக்குவதற்கான நகர்வு அல்ல. இது ராஜபக்ஷ அரசாங்கத்தை அம்பலப்படுத்துவதற்கான நகர்வு.

இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக இருக்கவேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு. இந்தியா தனது நலன்களை பேணுவதற்கு இலங்கை மீது ஒரு பிடியை வைத்திருப்பதற்கு விரும்புகின்றது.

ராஜபக்ஷ அரசாங்கம் உட்பட இலங்கை அரசியலில் ஆட்சியில் இருந்த எந்வொரு தரப்பும் தமிழர்களுக்கு அதிகாரங்களை பகிர்வதற்கு தயார் இல்லை.

இந்தியாவைப் பொறுத்த வரையில் இந்தியாவிற்கு, இலங்கை தாளம்போடுகின்ற ஒரு தரப்பாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்காவிட்டாலும் தனக்கு நெருக்கடிகளை, சவால்களை, தேசியப்பாதுகாப்பு அச்சுறுத்தல்களை விளைவிக்காத ஒரு நாடாக இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது.

அதேநேரத்தில் தற்போதைய பூகோள சூழலில் இருக்கின்ற அமெரிக்க இந்திய மேற்குலக கூட்டுறவால் இந்தியாவைப் புறந்தள்ளி அத்தரப்புக்கள் இலங்கை விவகாரத்தை கையாள்வதற்கு தயாரில்லை. அதேநேரம் அவர்கள் சீன எதிர்ப்புவாத நிலையிலும் இருக்கின்றார்கள்.

ஆகவே அந்த அடிப்படையில் நாங்கள் இந்தியா ஊடாக நகர்த்துகின்ற எந்தவொரு முயற்சியும் நிச்சயமாக அமெரிக்க, மேற்குலக வல்லாதிக்க நாடுகளின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான வழியாகத் தான் இருக்கும்.

இந்தியா தமிழர்களுடைய விடயத்தை கையில் எடுத்து அதை முன்னகர்த்துகின்றது என்ற அடிப்படையில் நீங்கள் பார்ப்பீர்கள் என்றால் அவர்கள் நிச்சயமாக ஆதரவு அளிப்பார்கள்.

அதேநேரத்தில் நாங்கள் இந்தியாவை தவிர்த்து அமெரிக்காவுக்கு, பிரித்தானியாவுக்கு சென்று பேசுவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. இது கடந்தகால வரலாறு.

ஆகவே தற்போது நாம் வழங்கிய கடிதத்தின் அடிப்படையில் இந்தியா பகிரங்கமாக பொது வெளியில் தமிழர்களுக்கு தீர்வு கொடுங்கள் என்று கூறமாட்டார்கள். அவர்களுக்கு இராஜதந்திர நகர்வுகள் இருக்கின்றன. கையாளுகைகள் இருக்கின்றன.

உதாரணமாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற ஒரு விடயம் இருக்கின்றது. இது பிரேரணை தோற்றாலோ வென்றாலோ மாற்றப்படுவதில்லை. இதற்கு இந்தியா தான் அடிப்படையாக இருக்கிறது.

ஆனால் ஐ.நா.வில் இலங்கை விடயத்தில் இந்தியா வாக்களிப்பதில்லை. அது இந்தியாவின் இராஜதந்திரம் ஆகவே தமிழர்கள் விடயத்தில் நீண்ட காலமாக செயற்பட்டு வந்திருக்கின்ற இந்தியா அதன் தார்மீக அடிப்படையில் நிச்சயமாக இந்த விடயங்களை கையில் எடுக்கும்.

அதேநேரம் இந்தக் கடிதத்துடன் நாங்கள் நின்றுவிடக் கூடாது தொடர்ச்சியாக இந்தியாவை முறைசார்ந்த அணுகுமுறை ஊடாக கையாள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-250-299)

## கிளிநொச்சியில் கனமழை

## நீரில் மூழ்கும் நெற்செய்கை




(தருமபுரம்)

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் நெற்பயிர்கள் மழையில் மூழ்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள நீர் புகுந்துள்ளதால் அன்றாட நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்று தருமபுரம் வர்த்தக சந்தை பகுதியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக அன்றாட வியாபார நடவடிக்கை பாதிக்கப்பட்டதுடன் மக்கள் சந்தைக்கு வருவதற்கு தயக்கம் காட்டுவதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்தனர். (5-6-316)

## காட்டு யானைகளால் பயன்தரு மரங்கள் அழிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்ணகைபுரம் பகுதியில் காட்டு யானைகள் புகுந்து பெருமளவான பயன்தரு தென்னை மரங்களை அளித்துள்ளன.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகைபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் வாழ்வாதார பயிர்களான தென்னை உட்பட பல பயன்தரு மரங்களையும் அளித்துள்ளன.

அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் தொடர்சியாக காட்டு யானைகளின் தொல்லை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் பெருமளவான பயன்தரு மரங்களை அழித்துள்ளன.

இவ்வாறு காட்டு யானைகளின் தாக்கத்துக்கு உள்ளாகியமை தொடர்பில் கிராம உத்தியோகத்தரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் கிராம உத்தியோகத்தர் சம்பவம் தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டார்.

குறிப்பாக அக்கராயன், ஸ்கந்தபுரம், முட்கொம்பன் பகுதிகளுக்கான யானை வேலிகளை அமைக்கின்ற போது இந்தப் பிரதேசங்களிலும் காட்டு யானைகளை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் பிரதேச விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர. (5-6-315)



முல்லைத்தீவு முள்ளியவளையில் அமைந்துள்ள சிறுவர் பாடசாலை ஒன்று க்கு ஈரோஸ் அமைப்பினால் ஒரு இலட் சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலை உரியவகையில் பராமரிப்பற்ற நிலையில் இருந்ததை யடுத்து அதனை விருத்தி செய்வதற்காக குறித்த நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. நிதி வழங்கும் இந்நிகழ்வில் ஈரோஸ் தலைவர் துஸ்யந்தன், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் இணைப் பாளர் [illegible] பிரதேச தலை [illegible] உறுப்பினர் [illegible] உட்பட [illegible] கலந்து கொண்டனர். (படம்:-சதீஸ்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2022-14.03.2022

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## தொழில் வளம் சிறப்பாக இருக்கும்



**வேகம் மற்றும் விவேகத் தோடு செயற்பட்டு வெற்றி காணும் மேஷ இராசி வாசகர் களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் 9 ஆம் இடத்தில் தனாதிபதி சுக் கிரனோடு கூடிஇருக்கிறார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

**ராகு-கேது ஆதிக்கம்**

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் ராகுவும், 8ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். ராகு வின் சஞ்சாரத்தால் தனவரவு தாரா ளமாக வந்து சேரும். அதே நேரம் குடும்பப் பிரச்சினை அதிகரிக்கும். கோபத்தால், உறவினர்களை பகைத்துக் கொள்ள நேரிடும். உழைப்பு அதிகம் தேவைப்படும். அஷ்டமத்தில் கேது இருப்பதால் அடிக்கடி ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். பயணங்களில் அடிக்கடி மாற்றம் வரலாம். சுப விரயங்களை மேற்கொள்வதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து விடுபடலாம்.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். மகர சுக்கிரனால் நிகரற்ற வாழ்வு உங் களுக்கு வரப்போகிறது. காரணம் தன, சப்தமாதிபதியாக விளங்குபவர் சுக்கிரன். அவர் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். புதிய பங்குதாரர்கள் வந்து இணை வார்கள். பொருளாதாரநிலை உய ரும். வாடகைக்கட்டடத்தில்நடை பெற்ற தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் எண்ணம் கைகூடும். வரன்கள் பார்த்துக் கொண்டிரு ந்தால், அது சுமுகமாக முடியும்.

**உச்ச செவ்வாய் சஞ்சாரம்**

உங்கள் இராசிநாதன் செவ்வாய், மாசி 14 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுவதால், மிகுந்த யோகம் வரப் போகிறது. உடல்நலம் சீராகும். இருப்பினும் அங்குள்ள சனியோடு செவ்வாய் சேர்வது சில தாக்கத் தையும் ஏற்படுத்தலாம். எனவே முடிந்த அளவு கவனத்தோடு செயற் படுங்கள். தொழில் பங்குதாரர்களால் தொல்லை உண்டு. புதிய ஒப்பந் தங்கள் வந்தால் அதை ஏற்றுக் கொள்ள இயலாத சூழ்நிலை உரு வாகும். தைரியமும், தன்னம்பிக்கை




யும் தேவைப்படும் நேரம் இது.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகோதர, சகாய ஸ்தானம் மற்றும் ஜீவன ஸ்தானத்திற்கும் அதிபதி யான புதன், மாசி 17 ஆம்திகதி உங்கள் இராசிக்கு லாபஸ்தானத்திற்கு வரு கிறார். உத்தியோக முன்னேற்றம், ஊதிய உயர்வு கிடைக்கலாம். நல்ல நிறுவனங் களில் இருந்து கூடுதல் சம்பளத் துடன் அழைப்புகள் வரலாம். கும்ப இராசியில் உள்ள சூரியன், குரு வோடு இணைவதால் அரசு வழி ஆதாயம் உண்டு. அரசாங்க வேலை க்காக முயற்சி செய்து விண்ணப் பித்தவர்களுக்கு அதுவும் கிடைக் கலாம்.

இம்மாதம் அஷ்டமத்து கேது இருப்பதால், வெள்ளிக்கிழமை தோறும் விநாயகப்பெருமானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும் மாதம் இது. கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். உங்கள் ராசிநாதன் செவ்வாய் உச்சம் பெறுவதால், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். வீடு வாங்கும் யோகம் உண்டு. படித்து முடித்த பிள்ளைகளுக்கு உத்தி யோகமும், உயர்பதவிகளும் கிடைக் கும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள்கிடைக்கும்வாய்ப்பு உண்டு.

## எதிர்பாராத நல்ல திருப்பங்கள் வரப்போகிறது



**கொள்கைப் பிடிப்போடு செயற்பட வேண்டும் எனக்கூறும் ரிஷப இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங் கள் இராசிநாதன் சுக்கிரன் அஷ்ட மத்தில் சஞ்சரிக்கிறார். 6 ஆம் இடத் திற்கும் அதிபதியானவர் சுக்கிரன் என்பதால், 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப எதிர்பாராத நல்ல திருப்பங்கள் வரப் போகிறது.

**ராகு-கேது ஆதிக்கம்**

உங்கள் இராசியிலேயே ராகு பகவான் சஞ்சரிக்கிறார். சப்தம ஸ்தா னத்தில் கேது பகவான் இருக்கிறார். எனவே பய ணங்கள் அதி கரிக்கும். பக் கத்தில் உள்ளவர்களால் சில சிக் கல்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற் றங்கள் வந்து கொண்டேயிருக்கும்.

கேதுவின் பலத்தால் வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினை அதி கரிக்கும். விட்டுக் கொடுத்துச் செல் லுங்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும், விரயங்கள் ஒருபுறம் அதிகரிக்கத்தான் செய்யும்.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இக் காலம் உங்களுக்கு ஒரு இனிய கால மாக அமையும். உங்கள் இராசிநாதன் சுக்கிரன், 9 ஆம் இடத்தில் புதனோடு வந்து சேர்வதால் 'புதசுக்கிர யோகம்' செயற்படும் நேரம் இது. கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும். தேங்கி நின்ற காரியங்கள் இனி சுறுசுறுப்பாக நடந் தேறும். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கல்யாணக் கனவு கள் நனவாகும். இடம், பூமியால் இலாபம் உண்டு.

**உச்ச செவ்வாய் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி மகர இராசிக் குச் செல்லும் செவ் வாய், அங்கு உச்சம் பெறுகிறார். அவர் அங்குள்ள சனியோடு சேர்வது அவ் வளவு நல்லதல்ல என்றாலும், ஒருசில பிரச்சினைகள் உருவாகி அதில் வெற் றியடையவும் செய்யும்.

குறிப்பாக விரயாதிபதியாக செவ்




வாய் விளங்குவதால் விரயங்கள் கூடும். எனவே இதுபோன்ற காலங் களில் சுபவிரயங்கள் மேற்கொள்வது நல்லது. வாழ்க்கைத் துணையின் வேலைவாய்ப்பு கருதி எடுத்த முயற் சியில் வெற்றி கிடைக்கும்.

**கும்ப-புதன் சஞ்சாரம்**

மாசி மாதம் 17 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். தன, பஞ் சமாதிபதியான அவர், தொழில் ஸ்தா னத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொடர்ந்து வரும் வாடிக்கையாளர் கூட்டம் அதிகரிக்கும்.

புதிய ஒப்பந் தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரி யப்படுவார் கள். பிள்ளைகளின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடை க்கும். பூர்வீக சொத்துக்களை பாக ப்பிரிவினை செய்து கொள்வதில் இருந்த தடை அகலும்.

இம்மாதம் ஜென்மத்தில் ராகு இருப்பதால் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

ஜென்ம ராகுவால் பயணங்கள் அதிகரிக்கும். ஆயினும் அலைச்ச லுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஒரு சிலருக்கு விரயங்கள் அதிகரிப்பதோடு வீடு மாற்றம் ஏற் படும்.

பிள்ளைகளை உங்களுடைய மேற்பார்வையில் வைத்துக் கொள் ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு சகப் பணியாளர்களால் பிரச்சினை கள் வரலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்புத் தேர்தல் முறைமையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்

## பாராளுமன்ற தெரிவுக்குழு அவதானம்

(கொழும்பு)

**விகிதாசாரம் மற்றும் தொகுதிவாரித் தேர்தல் முறைமையிலான கலப்புத் தேர்தல் முறைமையில் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் முறைமை தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள பாராளு மன்ற தெரிவுக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.**

அதற்கமைய 60 சதவீத பிரதிநிதிகளை விகிதாசார தேர்தல் முறைமையின் அடிப்படையிலும், 40 சதவீத பிரதிநிதிகளை தொகுதிவாரி தேர்தல் முறைமையின் கீழ் தெரிவு செய்வது குறித்து கலந் துரையாடப்பட்டுள்ளது.

தேர்தல் முறைமை மற் றும் தேர்தல் சட்டம் மறுசீர மைப்பு தொடர்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குண வர்தன தலைமையில் நிய மிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழு கடந்த வாரம் கூடியபோது இவ்விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப் பட்டது.

அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண் பிரதி நிதித்துவத்தை அதிகரி க்கும் நோக்கில் சகல அரசி யல் கட்சிகளின் வேட்பு மனுக்க ளிலும் பெண்களுக்கு முன் னுரிமை வழங்குவது குறித் தும் அவதானம் செலுத்தப் பட்டது.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய பிரதிநிதிகளின் எண்ணிக் கையை குறைப்பது தொடர் பிலும் அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை மற்றும் விருப்பு வாக்கு முறைமை ஆகியவற் றில் காணப்படும் குறைபாடு களை கருத்திற் கொண்டு கலப்பு விகிதாசார பிரதி நிதித் துவ முறைமை மிகச்சிறந்த தேர்தல் முறையாக அடை யாளம் காணப்பட்டுள்ளது எனத் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராயும் பாராளு மன்ற தெரிவுக் குழுவிடம் தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு யோச்னை முன்வைத்து ள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# விறகு அடுப்புக்கு மாறுங்கள்

## இல்லத்தரசிகளுக்கு அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

நாட்டுக்கு தேவையான சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியாத நிலைமையில், வீட்டுப் பெண் கள் மீண்டும் விறகு அடுப்பை பயன்படுத்த பழகிக்கொள்ள வேண்டும் என ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் வாரியபொல பெண்கள் அதிகார சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுருக்கமாக கூற வேண் டும் என்றால், எம்மால் இறக் குமதிகளை செய்ய முடியாத அளவுக்கான நிலைமை நாட்டில் உருவாகியுள்ளது.

நான் 24 வருடங்களாக மக்கள் பிரதிநிதியாகவும் ராஜாங்க அமைச்சராகவும் பதவி வகிக்கின்றேன்.

இதுவரை எமது வீட்டில் சமையல் அறையில் விறகு அடுப்பிலேயே சமைக்கின் றோம்.

நான் தொகுதி அமைப்பா ளராக இருக்கும் ஆனமடுவை தொகுதியில் தேவைக்கு அதிகமாக விறகுகள் இருக் கின்றன.

நவகத்தேகம, கருவலகஸ் வெவ, வண்ணாத்துவில்லு போன்ற இடங்களில் உள்ள சிலர் எரிவாயுவிலேயே சமைக்கின்றனர். விறகு களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையில் இது நடக்கின்றது.



வீடுகளில் சமையல் எரி வாயு மூலம் பெறப்படும தீயில் எமது நாட்டின் டொலர்கள் எரிந்தே வெளிநாடுகளுக்கு செல்கின்றன.

இதன் காரணமாகவே விறகு அடுப்பைப் பயன்படுத் துவது சிறந்தது என நான் கூறுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலையும் அதிகரிப்பு?

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற் றோல் மற்றும் டீசல் ஆகிய வற்றின் விலை விரைவில் உயரக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

நிதியமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் இந்த விலை யுயர்வு அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

ஏற்கனவே இலங்கையில் செயற்படும் இந்திய நிறுவன மான லங்கா ஐ.ஓ.சி. தமது பெற்றோல் மற்றும் டீசல்களு க்கான விலையை உயர்த்தியு ள்ளது.

இதனையடுத்து அதற்கு சமமாக தமது பெற்றோலியப் பொருட்களின் விலையை உயர்த்த வேண்டும் என்று இலங்கை பெற்றோலியக் கூட் டுத்தாபனம், நிதியமைச் சிடம் கோரியுள்ளது.

இந்த கோரிக்கைக்கு அனு [illegible] தல் கிடைத்தால், இந்திய எரி பொருள் நிறுவனம் பெற்றோ லியப் பொருட்களை விற் பனை செய்யும் விலையிலும் பார்க்க அதிக விலையுய ர்வை நிர்ண யிக்க எ்திர்பார் ப்பதாக இல ங்கை பெற்றோ லியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித் தார்.

ஏற்கனவே தமது நிறுவ னம் 6 முதல் 8 பில்லியன் ரூபா நட்டத்தின் இயங்கி வருவ தாகவும் அவர் குறிப்பிட்டு ள்ளார். (4)

# இன்று ஒரு தகவல்

## காலத்தை வீணாக்கலாமா

ஆரோக்கியத்தை இழந்தால் மருத்துவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். பொருளை இழந்தால் மீட்டுவிட முடியும். ஆனால் காலத்தை இழந்து விட்டால் திரும்பப்பெற முடியாது.

காலமறிந்து நடப்பவனுக்கு வறுமை என்பது இல்லை. வாழ்வில் உயர்வு உண்டு. காலத்தை இழந்தவனே வறுமையை அணைத்துக் கொள்கின்றான். வாழ்வில் தவிக்கின்றான். உண்மையைப் புரிந்து கொள்ளாமல் காலம் வரட்டும் எனக் காத்துக்கொண்டிருக்கிறான் .

குறிப்பிட்ட நேரத்தில் புறப்படும் ஓர் இரயி லைப் பிடிக்க இயலாமல் போனவர் இர யில் போய் விட்டது என்று குற்றம் சாட்டு வாரே தவிர நான் நேரத்தின் அருமையை உணராமல் போனேனே என எண்ணிப் பார்ப்பதில்லை.

வாழ்வு என்பது எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்தி, அது எரியுமளவும் வெளிச் சத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர அதை வீணே எரியவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு இருக்கக்கூடாது. அத்த கைய முயற்சி தினம் தினம் சிறிது சிறி தாக விஷத்தை உட்கொள்வது போன்ற தாகும்.

பக்குவம் அற்றவர்கள் காலத்தைப் போக்குவதற்கு என்ன வழி என்று ஆரா ய்கிறார்கள். அறிவுள்ளவர்கள் நேரம் போத வில்லையே என்று வருத்தப்படுகிறார்கள்.

விதைக்க வேண்டிய காலத்தில் விதைத் தால் தான் அறுக்க வேண்டிய காலத்தில் காரியம் ஆகும் என்னும் உண்மையை உணர்ந்து வைத்திருக்கிறார்கள் விவசா யிகள். அதனால் தான் அவர்கள் பயன் பெறுகிறார்கள். காலம் ஒரு பூவைப் போன் றது.

பூசாரியிடம் உள்ள பூ பூசை பொருளா கிறது. மணமக்களுக்கும் மாண்டவர்க ளுக்கும் அது மாலையாகிறது.

சிலருக்கு அது மருந்தாகின்றது. ஆக காலம் ஒன்று தான். அது கணித முறைப்படி நடக்கிறது. சிலர் தாம் அதைக் கெட்டகாலம், பொல்லாத காலம், போதாத காலம், காலத் தின் கோலம், காலவினை என்றெல்லாம் தங்கள் இழுக்கும் இழு வைக்கு ஏற்றாற் போல் மாற்றிக் கொள்கி ன்றனர்.

மனப்பக்குவம் உள்ளவர்களே அதை தங்களுக்கு எந்நேரமும் சாதகமாய் இருக் கும்படி பார்த்துக்கொள்கின்றனர். இந்த உண்மைகளை உணர்ந்து செயற்பட்டால் எக்காலமும் பொற்காலம் தான்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

## இரு பெண்களும் ஒரு கிழவனும்

பல ஆண்டுகளுக்கு முன், வாழ்ந்த ஒருவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். இருவருக்கும் ஒரு மகள் பிறந்தாள். முதல் மனைவியின் மகளுக்கு பிசி என்றும் இரண்டாவது மனைவியின் மகளுக்கு ரந்தி என்றும் பெயர்.பிசி ரந்தியைக் காட்டிலும் சில மாதங்கள் தான் முன்னால் பிறந்திருந்தாள்.

இந்தக் குடும்பம் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தது. இரண்டு பெண்களும் சேர்ந்தே விளையாடி பொழுது போக்கினார்கள். பிசியின் அம்மா ரந்தியின் அம்மாவுடன் ஏதாவது காரணத்திற்காக சண்டை பிடித்துக் கொண்டே இருந்தாள்.அதேபோல பிசியும் ரந்தியிடம் நடந்து கொண்டாள். அழுது கொண்டே தன் அம்மாவிடம் செல்லும் ரந்தி, பிசி தன்னை எப்படிக் காயப்படுத்தினாளோ அதேபோல அவளையும் நான் செய்ய வேண்டும் என்பாள்.அதற்கு அவளது அம்மா , 'ஒருவர் செய்த தீமைக்கு பதிலாக தீமையையே நீயும் திருப்பிக் கொடுக்காதே, அது ஒரு நன்மையும் கொடுக்காது என புத்திமதி சொல்லித் தேற்றுவாள். அம்மாவின் பேச்சைக் கேட்ட ரந்தி, மறுபடியும் பிசி பழகும் போது அவள் தன்னைக் காயப்படுத்தினாலும் அவளுடன் அன்பாகவே இருக்கத் தொடங்கினாள்.

ஒரு நாள் ரந்தியின் அம்மா திடீரென நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டார்.ரந்தியின் அம்மாவும் இல்லாத சூழலில் பிசிக்கு ரந்தியிடம் தனது விஷமத்தனங்களைக் காட்டுடுவதற்கு தடையே இல்லை. விரைவில் பிசி தன் வேலைகளை எல்லாம் செய்யாமல் சோம்பேறியாகிவிட்டாள். அவள் செய்ய வேண்டியதையும் சேர்த்து ரந்தியே செய்ய ஆரம்பித்துவிட்டாள். பிசி எப்போதும் ஊர் சுற்றுவதும், தன்னை அழகு பார்த்துக் கொள்வதும், சாப்பிடுவதும் தூங்குவதுமாக மாறிவிட்டாள். ரந்தி தினமும் அதிகாலையில் எழுந்து இரண்டு மண்பானைகளைத் தூக்கிக் கொண்டு அருகில் உள்ள ஆற்றங்கரைக்குச் செல்வாள். தலையில் ஒரு பெரிய பானையும் மற்றொரு சின்ன பானையுமாக நடந்து சென்று தண்ணீர் எடுத்து வருவாள். அவள் வீட்டில் உள்ள பெரிய தண்ணீர் தொட்டியை நிரப்புவதற்காக பலமுறை இப்படியே நடந்து சென்று தண்ணீர் எடுப்பாள் ரந்தி. பிறகு வீடு முழுவதும் பெருக்கி சுத்தம் செய்து விட்டு , எல்லோரும் சாப்பிடுவதற்கு கிழங்குகளை அவிப்பாள். அவளுடைய வேலைகள் அப்படியே நீண்டு கொண்டு போயின.




களைப்படைந்து பாயில் சரிந்து தூங்கும் வரை அவள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். தானே எல்லா வேலைகளையும் செய்து கஷ்டப்படுகிறோமே என்று யோசிப்பதற்குக் கூட அவளுக்கு நேரமில்லை.

ஒரு நாள் வழக்கம் போல அவள் தண்ணீர் எடுத்துவர ஆற்றங்கரைக்குச் சென்ற போது, ஒரு கிழவர் அங்கே அமர்ந்திருப்பதை கவனித்தாள். உடலெல்லாம் புண்களுடன் இருந்த அவர் மிகவும் பரிதாபமாகத் தோன்றினார். அவரிடம் , உங்களுக்கு ஏதாவது வேணுமா தாத்தா? எனக் கேட்டாள். ரந்தி. தாத்தா குடிப்பதற்கு கொஞ்சம் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்தார். பிறகு ரந்தி அவரது புண்களைக் கழுவிச் சுத்தம் செய்து விட்டாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பால காண்டம்



14

அவள் அடங்கி இருந்தால் இவன் முடங்கி இருப்பான்; அவள் போர் தொடங்குவதால் இவன் செயற்பட வேண்டியது ஆயிற்று.

"சேலை கட்டியவள்; அவள் மீது வேலை எறிவது தகாது" என்று எண்ணினான். அடித்துத் துரத்துவது என்று ஆரம்பத்தில் எண்ணினான்.

அதற்கு முனிவனின் அனுமதி கிடைக்கவில்லை. தம்மோடு தங்கை பிறவாத வெறுமை அவளிடம் அன்பு காட்டச் செய்தது. பெண் கொலை புரிதல் பெரும் பழி உண்டாக்கும் என்று தயங்கினான். ஆவும், ஆனியல் பார்ப்பனரும், பெண்டிரும், மகவு பெறாதவரும் களத்தில் அனுமதிக்கப் படுவது இல்லை; களத்தில் எந்தப் பெண்ணும் நின்று போராடியது இல்லை இவன் கற்ற கல்வி, அவளைக் கொல்லத் தடையாக நின்றது.

"கொலையிற் கொடியரைக் களைதல் களை பிடுங்குதற்குச் சமமாகும். அது நாட்டு அரசனின் கடமையாகும். தீயவரை ஒழித்தால் தான் உலகில் நன்மை நிலைத்திருக்கும். அறம் நோக்கி அழிவு செய்வது ஆளுநரின் கடமையாகும்.

"நீ தனிப்பட்ட மனிதன் என்றால் தயங்கலாம் : நீ அரச மகன்; உனக்குத் தீயோரை ஒறுத்தல் கடமையாகும்; இது உன் [illegible] செய்ய வேண்டிய கடமை அதை அவர் இதுவரை செய்யாமல் தாமதித்தது பெருந் தவறு ; நீ அவளை இரக்கம் காட்டி , விட்டுவிட்டால் , " நீ அஞ்சி அகன்றாய்" என்று உலகம் பேசும் ; "கோழை" என்று ஏழையர் பலர் கூறுவர்; தருமத்தின் முன்னாள் ஆண்.

பெண் பேதம் பார்ப்பது ஏதம் தரும்; வேதமும், பெண் ஆயினும் அவள் தவறு செய்தால் ஒறுப்பதை அனுமதிக்கிறது. ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்று பேசிப் பேதம் காட்டுவது அரச நெறியாகாது".

"மேலும் அவள் தாக்க வந்தவள்; அவள் உயிர் போக்குவது ஆக்கமான செயலே. "கொடியவள் ஒருத்தியை வீழ்த்தினாய்; என்று உன் பகமை உலகம் பேசும்" என்றார். முன்னோர் பலர் தவறு செய்த பெண்களைத் தீர்த்துக் கட்டிய சான்றுகளை அவன் முன் வைத்தார்.இராமன் அவர் கூறியவற்றைப் பொறுமையாகக் கேட்டான் இனி தாமதித்து பயனில்லை.

விஷ்வாமித்திரர் வாக்கு தான் வேத வாக்கு; அதற்குமேல் சான்றுகள் தேவை இல்லை என்பதை உணர்ந்தான்; அதற்கு மேல் வாதங்கள் தொடரவில்லை.

### அம்பு துளைத்தல்

இராமன் ஏலிய முதல் அம்பு, அவள் சூலத்தை முறித்தது; அடுத்து விட்ட அம்பு அவள் மார்பகத்தை துளைத்து முதுகு புறம் வெளியேறியது கல்லாத மடையர்களுக்குச் சொல்லும் நல்லுரைகள் அவர்கள் வாங்கிக் கொள்வது இல்லை; உடனே அவர்கள் அதை விட்டு விடுவார்கள்.

அது போல அவ் அம்பு அவள் மார்பில் நிற்காமல் வெளியேறி விட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மையின் மிக நெருங்கிய
நண்பன் அச்சம்.
– நேருஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சுருதியை மாற்றுகிறார் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

நீண்ட காலம் சிறையில் அடைபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனப் பாராளுமன்றத்தில் உரையாற்றியவர் நாமல் ராஜபக்ஷ.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது,

அதுகுறித்து தமிழ் மக்கள் தங்கள் நெற்றிப்புயங்களை உயர்த்தி, அதனை உற்றுக் கவனித்தனர்.

மகிந்த ராஜபக்ஷவின் மகனான அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றியதன் மூலம் அவர் மீது தமிழ் மக்கள் கவனம் செலுத்தத் தலைப்பட்டனர்.

தவிர, அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி வினவப்பட்டது.

அச்சந்தர்ப்பத்திலும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட வேண்டுமென அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென நாமல் ராஜபக்ஷ கூறுவதன் பின்னணியில் அவரது சிறிய தந்தையான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தந்தையான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் பச்சைக்கொடி காட்டியுள்ளனர் என்ற ஊகங்களும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவியது.

இந்த அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு விரைவில் விடுதலை கிடைக்குமெனத் தமிழ் மக்கள் நம்பினர்.

ஆனால் அந்த நம்பிக்கை இன்றுவரை நிறைவேறவில்லை.

மாறாக, இப்போது நாமல் ராஜபக்ஷ தனது சுருதியை மாற்றியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் ஐ.நா சபை தலையிட முடியாது என அதிரடியாக அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் தான் கூறியபடி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் கவனம் செலுத்தி, அதனை நடைமுறைப்படுத்தியிருந்தால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்த விவகாரத்தில் ஐ.நா சபை தலையிட வேண்டிய தேவை இருக்காது.

ஆக, தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் ஐ.நா தலையிட முடியாது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறியிருப்பதன் மூலம்; ஐ.நாவின் தலையீட்டைத் தடுப்பதற்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்ற ஒரு மாயைத் தோற்றத்தை ஏற்படுத்துவதையும் நோக்காகக் கொண்டே, அவர் ஏலவே பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை அமைந்துள்ளதென்பதை ஊகிக்க முடிகிறது.

எதுஎவ்வாறாயினும் இலங்கையில் சர்வதேசம் தலையிட முடியாது எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளாரெனில், சர்வதேசத் தலையீடு குறித்த பயம் ஆட்சித் தரப்புக்கு ஏற்பட்டுவிட்டதென்பதை மட்டும் இப்போதைக்கு ஊகிக்க முடிகிறது.

## கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வில் பொலிஸாரின் டிப்பர்களும் ஈடுபடுகின்றன

### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு பொலிஸார், இராணுவத்தினரின் துணையுடனேயே இடம்பெறுகிறது. பொலிஸாரின் டிப்பர் வாகனங்கள் கூட மணல் ஏற்றுவதாக மக்கள் தெரிவிக்கிறார்கள் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார். நேர்காணல் ஒன்றில் அவர் இதனை தெரிவித்தார்.

'கிளிநொச்சியில் பல இடங்களில் மணல், கிரவல் சட்டவிரோதமாக அள்ளப்படுகிறது. பொலிஸாரின் டிப்பர் வாகனங்களும் மணல் கடத்தலில் ஈடுபடுவதாக மக்கள் சொல்கிறார்கள். அந்த வாகன இலக்கங்களையும் சொல்கிறார்கள்.

பல இடங்களில் இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களை கடந்தே மணல் டிப்பர்கள் செல்கின்றன. எப்படி அவை செல்கின்றன?

மணல் அகழ்வு பற்றிய தகவல்களை பொலிஸாருக்கு வழங்கினால், தகவல் தந்தவர்களின் விபரங்களையும் பொலிஸார் கடத்தல்காரர்களிற்கு வழங்கிவிடுகிறார்கள் என தெரிவித்தார். (ஞா)

## சித்தங்கேணியில் விபத்து; இரண்டு பேர் காயம்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தங்கேணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் மோதியமையினாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியும் முச்சக்கர வண்டி சாரதியும் சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஞா-104)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற்கொண்டு விதையனைத்தும் விருட்சமே இளைஞரணி நடத்தும் 24 ஆவது இரத்ததான முகாம் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை இரத்தவங்கிப் பிரிவில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக்கொடையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்த தானமுகாம் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். தேவையுடைய கொடையாளர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலதிக விபரங்களுக்கு 077 324 1755 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (5,6,18)

## அதிகூடிய மழைவீழ்ச்சி ஆனையிறவில் பதிவு

(குப்பிழான்)

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 8.30 மணிமுதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில் ஆனையிறவுப் பகுதியில் கூடிய மழைவீழ்ச்சியாக 90.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப் பகுதியில் கிளிநொச்சியில் 57.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் அச்சுவேலியில் 48.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் வடமராட்சி அம்பனில் 39.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ். ஸ்ரான்லி வீதிப் பகுதியில் 36.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பருத்தித்துறையில் 36.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் தெல்லிப்பழையில் 34.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 23.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஞா-18)

## புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மலையக இளைஞர் யுவதிகளால் மலையக தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் 100 புகைப்படங்கள் உள்ளடங்கிய புகைப்படக் கண்காட்சி இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இல.15, றக்கா வீதியில் அமைந்துள்ள ஓவியக் கூடத்தில் நடைபெறும். (5,6,33)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மதமும் விஞ்ஞானமும்



கடவுளைப் பற்றி இதுவரை எல்லா மதங்களிலும் என்ன சொன்னார்கள்? எங்கும் உள்ளவன் **(Omnipresent)** என்றார்கள். எல்லாவற்றுக்குள்ளும் ஊடுருவி அணுவுக்குள்ளும் இயக்க சக்தியாக இருப்பவன். அவன் தான் எல்லாம் அறிந்தவன் **(Omniscient)** எல்லாம் வல்லவன் **(Omnipotent)** என்றார்கள். இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு அவரவர் மதத்தில் என்னென்ன சொல்லிக் கொடுக்கிறார்களோ அதற்கும் இந்தக் கடவுள் தன்மைக்கும் ஒத்துக் கொள்கிறதா என்று பாருங்கள்.

எந்த இடத்தில் யார் சொல்வது ஒத்துக் கொள்கிறதோ அதுதான் சரி. ஆனாலும் அதை அப்படியே எடுத்துக் கொண்டால் போதாது. இன்றைக்கு உலகில் விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. இந்த விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலமாக அந்தக் கடவுள் தன்மையானது இந்தப் பிரபஞ்சத்தை எந்த முறையிலே நடத்துகிறது என்பதையும், அதன் இயக்கம், நோக்கம் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அது தெரியாமல் அப்படியே பழைய கருத்துக்களையே வைத்துக் கொண்டால், மீண்டும் மனித அறிவு முன்னேற்றத்தில் முரண்படும். இப்பொழுது நம் உடலில் இந்த மாதிரி நடக்கிறது என்று சொன்னால் அது கடவுளால் நடக்கின்றது என்று சொல்லி விட்டால் போதாது. அந்தக் கடவுள் இந்த அணுவுக்குள்ளும் எம்மாதிரியாக இருந்து கொண்டு அதை நகர்த்துகிறான், சுற்றுகிறான், விளங்குகின்றான் அல்லது தோற்றப் பொருட்களைக் கூட்டுகின்றான், குறைக்கின்றான் என்பதைத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு ஒரு அறிவு இக்காலத்தில் வளர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

76



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

அட்டவணை 19 சூரிய மாதங்களின் கால அளவுகள்

| | சூரியமாதம் (தமிழ்பெயர்) | இராசி | சந்திர மாதம் (வழங்குபெயர்) | நாள் | நாடி | விநாடி | தற்பரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேழம் | மேடம் | சித்திரை | 30 | 55 | 32 | 00 |
| 2 | விடை | இடபம் | வைகாசி | 31 | 24 | 12 | 00 |
| 3 | ஆடவை | மிதுனம் | ஆனி | 31 | 36 | 38 | 00 |
| 4 | கடகம் | கர்க்கடகம் | ஆடி | 31 | 28 | 12 | 00 |
| 5 | மடங்கல் | சிம்மம் | ஆவணி | 31 | 02 | 10 | 00 |
| 6 | கன்னி | கன்னி | புரட்டாசி | 30 | 27 | 22 | 00 |
| 7 | துலை | துலாம் | ஐப்பசி | 29 | 54 | 07 | 00 |
| 8 | நளி | விருட்சிகம் | கார்த்திகை | 29 | 30 | 24 | 00 |
| 9 | சிலை | தனுசு | மார்கழி | 29 | 20 | 53 | 00 |
| 10 | சுறவம் | மகரம் | தை | 29 | 27 | 16 | 00 |
| 11 | கும்பம் | கும்பம் | மாசி | 29 | 48 | 24 | 00 |
| 12 | மீனம் | மீனம் | பங்குனி | 30 | 20 | 21 | 15 |
| | மொத்தம் | | | 365 | 15 | 31 | 15 |

சில சமயங்களில் ஆடி மாதத்தில் 32 நாட்கள் வருவதும் உண்டு. இந் நாட்களே கலண்டரில் உள்ளன. இராசியும் மாதமும் ஒன்றே என்பதையும் அறிக.

(1) மேடம், வருடை (ஒரு வகை ஆடு) என்ற அடையாளத்தாலும், (2) இடபம், காளை அல்லது மாடு என்ற அடையாளத்தாலும், (3) மிதுனம் இரட்டைகள் என்ற அடையாளத்தாலும், (4) கர்க்கடகம் நண்டு என்ற அடையாளத்தாலும், (5) சிம்மம், சிங்கம் என்ற அடையாளத்தாலும், (6) கன்னி, கன்னிப் பெண் என்ற அடையாளத்தாலும், (7) துலாம், இரு பக்கத்திற்கும் நடுநிலையில் இருக்கும் துலாபாரம் என்ற அடையாளத்தாலும், (8) விருச்சிகம், தேள் என்ற அடையாளத்தாலும், (9) தனுசு வில் மற்றும் அம்பு சேர்ந்திருக்கும் ஒரு சிலை என்ற அடையாளத்தாலும், (10) மகரம், முதலை போன்ற உடல் கொண்டு, ஆட்டின் தலை கொண்ட உயிரினம் என்ற அடையாளத்தாலும், (11) கும்பம், ஒரு பானையிலிருந்து பெருகியோடும் நீர் என்ற அடையாளத்தாலும், (12) மீனம், இரு மீன்கள் என்ற அடையாளத்தாலும் குறிக்கப்படுகின்றன.

சூரிய மாதங்களைப் பயன்படுத்தும் சில பகுதிகளைச் சேர்ந்தவர்கள், எடுத்துக் காட்டாக கேரளாவில், இராசிகளின் பெயரையே மாதங்களுக்கும் வைத்து அழைக்கிறார்கள். தமிழ் மாதப் பெயர்கள் சந்திரமான முறையில் அமைந்த மாதப்பெயர்கள் போல நட்சத்திரங்களின் பெயர்களைக் கொண்டவை. சூரியமான முறையின் அடிப்படையில் அமைந்த தமிழ் மாதங்களுக்குச் சந்திரமானமுறையோடு இணைந்த நட்சத்திரங்களின் பெயர்கள் இடப்பட்டதன் காரணம் தெளிவாகத் தெரியவில்லை. வரலாற்றுக் காரணங்களினாலேயே இம் முறை புழக்கத்துக்கு வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### வருடப்பகுப் பின் அடிப்படை

தமிழர் ஒரு வருடத்தினை பகுப்பின் அடிப்படையில் 48 நாள் ஒரு மண்டலம் எனவும், 6 சூரிய மாதம் ஒரு அயனம் எனவும், 2 அயனம் ஒரு வருடம் எனவும் பகுக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழர் ஒரு வருடத்தின் (ஆண்டின்) பொழுதுகளை காலத்திற்கேற்ப ஆறு பெரும் பொழுதுகளாகவும் ஒவ்வொரு பெரும் பொழுதும் இரண்டு ஞாயிறு கால அளவாகவும் (2 சூரிய மாதங்களாகவும்) பகுத்தனர். அது அட்டவணை 20 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 20 பெரும்பொழுதுகள்


| பெரும்பொழுது | ஞாயிறு(சூரியமாதம்) | திங்கள்(சந்திரமாதம்) |
|---|---|---|
| இளவேனில் | மேழம், விடை (மேடம், இடபம்) | சித்திரை, வைகாசி |
| முதுவேனில் | ஆடவை,கடகம் (மிதுனம், கர்க்கடகம்) | ஆனி, ஆடி |
| கார் | மடங்கல், கன்னி (சிம்மம், கன்னி) | ஆவணி, புரட்டாசி |
| கூதிர் | துலை, நளி (துலாம், விருச்சிகம்) | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனி | சிலை, சுறவம் (தனுசு, மகரம்) | மார்கழி, தை |
| பின்பனி | கும்பம், மீனம் | மாசி, பங்குனி |

### வருடப் பிறப்பு

சூரியனின் தெற்கு-வடக்கு நகர்வு அயன நகர்வு எனப்படும். சூரியன் வடக்கு நோக்கி நகரும் ஆறு மாத காலத்தை வட செலவு (உத்ராயணம்) எனவும் பின்பு தெற்கு நோக்கி நகரும் ஆறு மாதகாலத்தை தென் செலவு (துட்சனாயணம்) எனவும் அழைப்பர்.

அயன நகர்வின் போது சூரியன் வான் உச்சிக்கு வரும் நாளே ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளப்பட்டது. இந் நாளே, கதிரவன் சூரிய மாதங்களின் (இராசிச்சக்கரத்தின்) முதல் மாதத்தில் (மேழ மாதத்தில் (இராசி)) நுழையும் நாளாகும். இதனைப் படம் 6 இல் காண்க.

உத்ராயணம் மற்றும் தட்சனாயணம்




சூரியன் வடக்கு நோக்கி நகரும் ஆறு மாத காலத்தை உத்ராயணம், பின்பு தெற்கு நோக்கி நகரும் ஆறு மாத காலத்தை தட்சனாயணம் ஆகும் (படம் 6)

### சந்திரன் பூமியைச் சுற்றிவருவதை அடிப்படையாகக் கொண்டு அளக்கப்படுபவை

மாதப்பகுப்பின் அடிப்படை

பண்டைய தமிழகத்தில் சூரியமானம், சந்திரமானம் எனும் இரண்டு வகையான மாதங்களைக் குறிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளன என்றும் சூரியமானம் என்பது பூமிக்குச் சார்பாகச் சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்துக் காலத்தைக் கணிக்கும் முறையென்றும் சந்திரமானம் சந்திரனுடைய இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டதென்றும் முன்னர் கூறப்பட்டது. சந்திரமானம் என்றால் என்னவென்று இப்போது பார்ப்போம்.

### சந்திரமானம்

ஒரு சந்திர மாதம் என்பது, சந்திரனானது பூமியை ஒரு முறை சுற்றி வர எடுத்துக் கொள்ளும் கால இடை வெளியாகும். இவ்வாறு சுற்றிவரும் போது பூமியிலிருந்து பார்ப்பவர்களுக்குச், சந்திரன் முற்றாகவே தெரியாத ஒரு நிலையான அமைவாசையிலிருந்து படிப்படியாக வளர்வது போல் தோற்றமளித்து முழுவட்டமாகத் தெரியும் நிலையான பூரணைக்கு வரும். (குறிப்பு- அமைவாதல் என்பது நிலவின் ஒளி அமர்ந்து போகுதல் ஆகும். அமைவாதல் என்பது அமைவாதை, அமாவாதை, அமாவாசை, அம்மாவாசை என்று திரிந்தன.) இந்த காலத்தின் பெயர், வளர் பிறை காலம் எனப்படும். பின்னர் அதன் உருவம் தேய்ந்து மீண்டும் முற்றும் தெரியாத நிலையான அமைவாதைக்கு வரும். இந்த காலத்தின் பெயர், தேய்பிறை காலம் எனப்படும். சந்திரன் பூமியை இவ்வாறு தொடர்ந்து சுற்றிவருவதனால் அமைவாதையும் பூரணையும் மாறிமாறி வருகின்றன. இரண்டு அடுத்தடுத்து வரும் அமைவாதைகளுக்கு இடைப்பட்ட காலமும், அவ்வாறான இரண்டு பூரணைகளுக்கு இடைப்பட்ட காலமும் சமனான அளவு கொண்டவை.

இந்தக்கால அளவு (29. 53059 நாட்கள்) 29 நாட்கள் 31 நாழிகைகள்50 விநாடிகள்8 தற்பரைகள்ஆகும். சந்திரன் பூமியை 27.3 நாட்களிலேயே சுற்றி முடித்து விடுகிறது. ஆனால், பூமி சூரியனை சுற்றிவருவதால், சந்திர மாதம் தொடங்கிய பொழுது சூரியன் இருந்த அதே நிலைக்கு சந்திரன் வர 2.23 நாட்கள் அதிகமாக எடுத்துக் கொள்கிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 பேர்...

கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,808 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## 6 மணி...

நாட்டின் தற்போதைய நிலைமையில், தொடர் மழைவீழ்ச்சி கிடைக்காவிட்டால் ஏப்ரல் மாதமாகும்போது நீர் மின் உற்பத்திக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படுமென மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 6 மணிநேர தொடர் மின் துண்டிப்பை மேற்கொள்ளவதற்கான எச்சரிக்கை காணப்படுவதாக மின்சார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## ராஜபக்ச...

மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் சூளுரைத்துள்ளார்.

## 125...

நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

காலி- உனவட்டுன பகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து சதொச விற்பனையகங்களிலும் குறித்த விலைக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றார். (ஞா)

## 1,150...

யாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 628,116ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## திருக்கேதீஸ்வர...

கம் மேற்கொண்டுள்ளது.

மன்னார் உயர் அரச அதிகாரிகளுக்கு முன்கூட்டியே அறிவித்தும் சொரூபம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவது மிகுந்த அவதானத்துக்குரிய விடயமாகும்.

மேற்படி மாதா சொரூபம் அமைக்கப்பட்ட விடயத்திற்கு அகில இலங்கை சைவ மகா சபை தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. (ஞா-104)

## இலங்கைக்கு...

இந்தப் பிரேரணையை இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றவை எனக் கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கான பொறுப்புக்கூறலின் தாமத நிலை மற்றும் அண்மைய கால உரிமை மீறல்கள் பற்றிய விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என கொழும்பு இராஜதந்திர மட்டத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பிரித்தானியா கொண்டுவரவுள்ள இந்தப் புதிய பிரேரணைக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலவும் மேற்குலக நாடுகள் சிலவும் ஆதரவைத் தெரிவித்துள்ளன எனவும் அந்தத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் ஜெனிவாவில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அரசு பல்வேறு வியூகங்களை வகுத்து வருகின்றது.

இதனடிப்படையில் ஜெனிவா அமர்வுக்கு முன்னர் முக்கிய சில ஐரோப்பிய நாடுகளுடன் கலந்துரையாடலை முன்னெடுக்க வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தீர்மானித்துள்ளார். இந்தக் கலந்துரையாடல்களுக்குச் சில நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன என வெளிவிவகார அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

அதேசமயம் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக ஜெனிவா செல்லவுள்ளார்.

மார்ச் 3ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த எழுத்து மூலமான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த அறிக்கையானது இலங்கைக்குச் சவால்மிக்கதாகவே அமையும் எனவும் கருதப்படுகின்றது. (ஞா)

## (உடுதும்பர...)

உடுதும்பர ஹசலக்கவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

பொய்யினாலேயே இந்த அரசாங்கம் தனது இருப்பை பாதுகாத்து கொள்கின்றது. மக்களை ஏமாற்றுவதே அவர்களின் அப்போதைய நிகழ்ச்சி நிரல். "சீனியின்றி தேநீர் அருந்துவோம், மிளகாயின்றி ரசம் உண்போம், புல்லையேனும் நாம் உண்போம்" என்று வரலாற்றில் சிலர் கூறிய தாகவும், அன்று போலவே இன்றும் பசளையின்றி விளைச்சல் பெறுவோம், நெல்லின்றி சோறு சாப்பிடுவோம், மின்சாரமின்றி நாம் வாழ்வோம் என்று பொறுமையுடன் மக்கள் இன்று வாழ்வர்கள் என அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது.

நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த இந்த கொடூர அரசாங்கம் இன்னும் தொடர வேண்டுமா? கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே இந்த அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும் எனவும், அதன் பிறகு அடுத்த தலைமுறையின் பிரச்சினைகளுக்கு விடை தேடும் திறமை, ஆற்றல் மற்றும் இயலுமைக்கு இடமளிக்கும் அரசை உருவாக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

## 12 பேர்...

ருந்த 12 இந்திய மீனவர்களையும் அவர்களின் இரண்டு படகுகளையும் நேற்று முன்தினம் இரவு கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர்.

குறித்த 12 மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்த நிலையில் குறித்த 12 பேரையும் நேற்று பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்திய போது இம்மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஞா-316)

## சீனா...

குவது குறித்து கரிசனை கொண்டுள்ளது. எனினும் இந்த அச்சங்கள் தேவையற்றவை என வெளிவிவகார அமைச்சர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு இரண்டு நாள் விஜயமாக சென்றிருந்த பீரிஸ் 'டைம்ஸ் ஒவ் இந் தியா' விற்கு அளித்த பேட்டியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு.

தவறான அனுமானங்களின் அடிப்படையில் சீனா குறித்த கேள்விகள் எழுகின்றன என தெரிவித் துள்ள இலங் கையின் வெளிவிவகார அமைச்சர சீனாவின் திட்டங்கள் காணப்படுகின்றது என்றால் இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்களும் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

## அடுத்த...

இடம்பெற்ற கறுவாப்பட்டை வழங்கும் நிகழ்ச்சியின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்துள்ள மக்கள் பேரணியின் இரண்டாவது பேரணி மாத்தறையில் நடைபெறவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஞா)

## சுகாதார...

சட்டமா அதிபர் திணைக்களத்தின் முறைப்பாட்டின் அடிப்படையில், தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்துமாறு அரசாங்க தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னப்பிரிய ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றினால் இரண்டு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், தடை உத்தரவு குறித்து தங்களுக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை என்று பல சுகாதார சங்கங்கள் கூறுகின்றன. (ஞா)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 13/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1211
வெற்றி இலக்கங்கள்: துலாம் 3 2 4 3 3 4

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 13/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1025
வெற்றி எழுத்து F, சுப்பர் இலக்கம் 19, வெற்றி இலக்கங்கள் 23 67 70 74

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 018
வெற்றி இலக்கங்கள்: தனுசு 01 25 41 42 தனுசு

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2022/02/13
சீட்டிழுப்பு இலக்கம் 4677
ஆங்கில எழுத்து 0, வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 2 2 7 7 9

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 13.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2972
ஆங்கில எழுத்து K, வெற்றி இலக்கங்கள் 13 16 38 52

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி -2022.02.13
சீட்டிழுப்பு இலக்கம் -707
ஆங்கில எழுத்து C, வெற்றி இலக்கங்கள் 02 29 36 55

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1480
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 13.02.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,610,620
வெற்றி இலக்கங்கள் 21 38 41 65, ஆங்கில எழுத்து P

அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 9615
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 13.02.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,116,220
வெற்றி இலக்கங்கள் 08 26 47 60, ஆங்கில எழுத்து U

அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 134
சீட்டிழுப்பு திகதி 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 10 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,727,120/-

அபிவிருத்தி லொத்தர் சபை

### ராசி

திகதி 13.02.2022
சீட்டிழுப்பு வாரம் 3366
வர்ணம் ஊதா
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,615,915/-
வெற்றி இலக்கங்கள் 39 50 58 62
1 9 3 3 5 0 1
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,774,340/-

### லக்ன வாசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 18 06 19 22 66
சீட்டிழுப்பு வாரம் 830
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.02.13 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 212,715,397/-
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1654
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 13.02.2022
தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: I 37 44 64 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,146,687/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை விற்பனைக்கு

யாழ். நகரில் இரு கடைகள் உடன் விற்பனைக்கு உண்டு. (10177)

**077 922 9333**



## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-3746)

0768226240 DHL


# ஆட்சி மாற்றம் உடன் தேவை

## சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இன்றைய நிலைமை மிகவும் மோசமான கட்டத்தில் உள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மக்கள் அனைவரும் பொறுமை இழந்துள்ளனர் எனவும், நாட்டில் அடுத்து என்ன நடக்கும் என்று தன்னால் கூற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தற்போதைய ஆட்சியால் நாடு சீரழிந்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் அதள பாதாளத்தில் சென்றுள்ளது. நாடு மீண்டெழ முடியாத நிலையில் உள்ளது.

ஆட்சிமாற்றமே தற்போதைய உடனடித் தேவையாகும். எனவே, நாட்டையும் மக்களையும் ஜனநாயகத்தையும் நேசிக்கும் மக்கள் பிரதிநிதிகள் ஓரணியில் உடன் திரள வேண்டும். அப்போதுதான் நாட்டை மீட்டெடுக்க முடியும் என்றார். (ஞா)


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 6113**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 3536**

**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- **076 443 1576** (C-3769)



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 14 அடி பாதையுடன்
- தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்
- நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் 250 தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**ஒரு பரப்பின் விலை 3,50,000/=**

தொடர்பு

**077 814 7389, 077 117 8578**



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- A32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்

**ஒரு பரப்பின் விலை 3,00,000/=**

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை

(10165)

தொடர்பு


**077 814 7389, 077 117 8578**


# 3 ஆம் ஆண்டில் மாறாத நினைவலைகள்

**எத்தனை பிறப்பெடுத்தாலும் எங்கள் மாமாவாக பிறக்க வேண்டும்!**

## அமரர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

**(ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் - இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்)**



**அன்னை மடியில் 01.03.1949** — **திதி: அட்டமி** — **ஆண்டவன் அடியில் 13.02.2019**

ஈழத்தின் திருப்பரங்குன்றமாம்
குப்பிழான் பதியிலே தோன்றி– எங்கள்
குடும்பத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த
ஒப்பில்லாத உயர்வினரே!
நீங்கள் மறைந்து மூன்று ஆண்டுகளானாலும்
எண்ணங்களில்– என்றும்
எங்களுடன் நீங்கள் வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்கள் அன்பு மாமா!

திருமந்திரத்தின் சாறைப் பிழிந்தெடுத்த வித்தகரே!
சிவமகாலிங்கம் எனும் பெயருடைய தூயவரே!
அள்ள அள்ளக் குறையாத
உங்கள் தனித்துவ சொற்பொழிவாற்றலும்
சைவத்தமிழுக்காக நீங்கள் செய்த மகத்தான
சேவைகளும்
காலம் தாண்டியும் வரலாற்றில் – என்றும்
நிலைத்திருக்கும் இது உறுதி....!

எங்கள் குல தெய்வமாகவும்,
பேசும் தெய்வமாகவும் நின்று
பேரருள் புரியும் கற்கரைக் கற்பக விநாயகன் என்று
குப்பிழானில் நீங்கள் சொற்பொழிவு ஆற்ற
ஆரம்பிக்கும் பாங்கும்

வீடு தேடி வரும் போதெல்லாம்
வாசல் காணும் முன்னரே இந்திரா...இந்திரா....என
உங்கள் அன்புத் தங்கையை உரத்த தொனியில்
அழைக்கும் பாங்கும்
இன்றுவரை எம் காதுகளில்
ஓயாது ஒலித்துக் கொண்டிருப்பதை
நீளாத் துயில் கொண்ட நீங்கள் அறிவீரோ!

ஆண்டு மூன்றுகள் ஆனாலும்
ஆறாத உங்கள் அன்புத் தங்கையின் மனதை
தேற்றிட எம்மால் இன்னும் முடியவில்லை!
தேடிக் கொண்டேயிருக்கின்றோம் உங்களுடன்
பழகிய ஞாபகங்களை!
எங்களுக்கென ஒரு அடையாளத்தை உருவாக்க முதலே
எங்களுக்கான தனி அடையாளத்தை உருவாக்கிய
பெருந்தகையே!
உங்களை இப் பிறப்பில் மாமாவாக நாம் பெற்றதே
முற்பிறப்பில் நாம் செய்த மகாதவம்
அடுத்து எத்தனை பிறப்பெடுத்தாலும் நீங்களே
எங்கள் மாமாவாகப் பிறக்கும் வரம் வேண்டும்!

என்றென்றும் நினைவுகளுடன்: **திருமதி இந்திரவதனா செல்வநாயகம் (அன்புச் சகோதரி), வைத்திலிங்கம் செல்வநாயகம் (மைத்துனர்), அன்பு மருமகன்கள் - செ.கிரிசாந் (நிமிர்வு இதழின் பிரதம ஆசிரியர்), செ.ரவிசாந் (ஊடகவியலாளர்), செ.சசிகாந் (ஜன** [illegible] **"இந்திரவனம்", குப்பிழான் தெற்கு, ஏழாலை.**

தகவல்: செ.ரவிசாந்

(C-3774)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.